# News Release

# நார்த் மேப்பிள் பிராந்திய பூங்காவில் புதிய குடும்பப் பொழுதுபோக்கு பகுதியின் கட்டுமானப் பணிகளை வாகன் நகரம் தொடங்கியது

**வாகன், ஒன்ராறியோ (ஜூலை 16, 2025)** – இந்த வாரம், நார்த் மேப்பிள் பிராந்திய பூங்காவின் மேம்பாட்டில் மற்றொரு முக்கியமான கட்டத்தை இன்று வாகன் நகரம் கொண்டாடியது. எதிர்காலத் தலைமுறைகளுக்குப் பயனளிக்கும், பல்வேறு பொழுதுபோக்கு மற்றும் செயல்பாடுகளுக்கான மையமாக உருவாகும் புதிய குடும்பப் பொழுதுபோக்கு பகுதியின் கட்டுமான பணிக்கான பூமி பூஜை நிகழ்வு இன்று நடைபெற்றது.

$26-மில்லியன் மதிப்பிலான இந்தத் திட்டத்தின் கட்டுமானத் துவக்கத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு விழாவில் மேயர் ஸ்டீவன் டெல் டுகா, கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் முக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டனர்.

900 ஏக்கர் பரப்பளவுள்ள நார்த் மேப்பிள் பிராந்திய பூங்காவில் 15 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்படும் இந்தக் குடும்பப் பொழுதுபோக்கு பகுதி, இயற்கை விளையாட்டு மைதானங்கள், நீர் விளையாட்டு பகுதி, குளிர்காலப் பனிச்சறுக்கு பாதை, ஏரிக்கரை நடைபாதை மற்றும் எளிதாக அணுகக்கூடிய வழித்தடங்கள், பெரிய பிக்னிக் காட்சிக்கூடம், மலர் தோட்டங்கள், வாகன நிறுத்துமிடம் மற்றும் கழிவறைகளுடன் கூடிய கூடார மண்டபம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

NMRP மேம்பாடு என்பது வாகன் நகரத்தின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகும். இந்த இடம் ஒரு முக்கியமான வரலாற்றைக் கொண்டுள்ளது — இது ஒருகாலத்தில் வட அமெரிக்காவின் மூன்றாவது பெரிய குப்பை நிரப்புமிடமாக இருந்தது. Vaughan CARES எனும் குடிமக்கள் குழு, 2002 ஆம் ஆண்டு அந்தக் குப்பை நிரப்புமிடத்தை மூடுவதில் முக்கியப் பங்கு வகித்தது. அதற்குப் பிறகு, மீட்பு, ஈடுபாடு மற்றும் விளையாட்டு என்ற மூன்று முக்கியக் கொள்கைகளை வழிகாட்டியாகக் கொண்டு, அந்த இடத்தைப் பூங்கா நிலமாக மாற்றுவதற்காக வாகன் நகரம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. NMRP, வாகன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கான ஒரு தனித்துவமான முக்கியமான இடமாக உருவாக்கப்பட்டு வருகிறது.

திட்டத்தின் சமீபத்திய தகவல்களை அறிய, [vaughan.ca/**NMRP**](vaughan.ca/NMRP) என்ற இணையதளத்தைப் பார்வையிடுங்கள்.

**மேற்கோள்**

“அழகான நார்த் மேப்பிள் பிராந்திய பூங்காவில் புதிய குடும்பப் பொழுதுபோக்கு பகுதியின் கட்டுமானப் பணிகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்கிறேன். இந்த 900 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தை விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் சார்ந்த ஒரு முக்கிய இடமாக மாற்றும் முயற்சியின் முக்கியமான கட்டமாக இது அமைந்துள்ளது. இது, குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், குடும்பங்களும் பார்வையாளர்களும் கூடும் முன்னணி இடமாக உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ள எங்கள் இலட்சியத்தின் ஒரு பகுதியாகும். இந்தத் துணிவான நகர மேம்பாட்டு முயற்சியைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து தலைமை வகிக்கின்ற நகரத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு குழுவுக்கு என் பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன். இந்தப் புதிய பகுதி 2026ஆம் ஆண்டுத் திறக்கப்படும் போது, அது வழங்கவிருக்கும் அனைத்தையும் அனுபவிப்பதற்காக நான் மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.”

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

"நார்த் மேப்பிள் பிராந்திய பூங்கா என்பது முன்னர் குப்பை நிரப்புமிடமாக இருந்த இடத்தை எல்லாக் குடும்பங்களும் மகிழ்ந்து பயன்பெறும் வகையில் உலகத் தரத்திலான பொழுதுபோக்கு இடமாக மாற்றியமைக்கக் கூட்டு முயற்சி எவ்வாறு உதவுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். மேயர் டெல் டுகாவுடன் இணைந்து இந்த ஆண்டு முழுவதும் செயல்படும் பூங்காவை மேம்படுத்துவதிலும், குடும்பங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிறப்பான பகுதியை உருவாக்குவதிலும் பங்கெடுக்கிறேன் என்பதில் பெருமைப்படுகிறேன். வாகன் நகரத்தின் முன்னோக்கிய பார்வையும், உறுதியான கூட்டணியும் காரணமாக, ஸ்ப்ளாஷ் பேட்கள், சறுக்கு பாதை, நடைபாதை மற்றும் ஒரு பெரிய குடும்பப் பிக்னிக் காட்சிக்கூடம் ஆகியவை அடுத்த ஆண்டில் இங்கு மேப்பிளின் மைய பகுதியில் திறக்கப்படும்.”

- ஸ்டீபன் லெட்செ, கிங்—வாகன் தொகுதிக்கான மாகாண சட்டமன்ற உறுப்பினர்

**முக்கியத் தகவல்கள்**

- ஜூலை 14 ஆம் தேதி, மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள், 11085 Keele St பகுதியில் அமைந்துள்ள நார்த் மேப்பிள்

பிராந்திய பூங்காவில் புதிய குடும்பப் பொழுதுபோக்கு பகுதியின் பூமி பூஜை விழாவை நிகழ்த்தினர்.
- இந்தக் குடும்பப் பொழுதுபோக்கு பகுதி, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும், வெளியிட பொழுதுபோக்கு, மற்றும் சமூக ஒன்றுகூடலுக்கான பல்வேறு வசதிகளுடன் அமைய உள்ளது.
- நார்த் மேப்பிள் பிராந்திய பூங்கா 11085 Keele St-ல் அமைந்துள்ளது. இந்தக் குடும்பப் பொழுதுபோக்கு பகுதி, அங்குள்ள ஒரு புதிய குளம் அருகிலுள்ள பகுதியில் (Pondside District) அமைந்திருக்கிறது.

**மேலும் அறிய**

- நார்த் மேப்பிள் பிராந்திய பூங்கா வலைப்பக்கம்

-30-

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca